

# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### நீலகிரி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரங்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 29.06.2025 | பந்தலூர் கிழக்கு ஒன்றியம் | பிதர்க்காடு | மு.பாண்டியராஜ்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 2 | | நெல்லியாளம் நகரம் | பந்தலூர் | மு.பாண்டியராஜ்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 3 | | பந்தலூர் மத்திய ஒன்றியம் | எருமாடு | எம்.பி.ஆலன்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 4 | | பந்தலூர் மேற்கு ஒன்றியம் | கொளப்பள்ளி | எம்.பி.ஆலன்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 5 | 30.06.2025 | கோத்தகிரி ஒன்றியம் | அரவேணு பேருந்து நிலையம் | சி.ஏ.கலீம்<br>சீ.தருண்குமார் |
| 6 | | கீழ் கோத்தகிரி ஒன்றியம் | நெடுகுளா கிராமம் | சி.ஏ.கலீம்<br>சீ.தருண்குமார் |
| 7 | | கூடலூர் நகரம் | காந்தி திடல் | எழும்பூர் மோ.கோபிநாத்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 8 | | கூடலூர் ஒன்றியம் | மசினக்குடி | எழும்பூர் மோ.கோபிநாத்<br>ச.தஸ்லிமா நஸ்ரின் |
| 9 | 02.07.2025 | குன்னூர் நகரம் | கிருஷ்ணாபுரம் | இளந்தென்றல் பாபு<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 10 | | குன்னூர் ஒன்றியம் | அருவங்காடு | இளந்தென்றல் பாபு<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 11 | 05.07.2025 | உதகை வடக்கு ஒன்றியம் (கிழக்கு) | கக்குச்சி | சேலம் சுஜாதா<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 12 | | உதகை வடக்கு ஒன்றியம் (மேற்கு) | தேனாடுகம்பை | சேலம் சுஜாதா<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 13 | | மேலூர் ஒன்றியம் | தூதூர்மட்டம் | சேலம் சுஜாதா<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 14 | 06.07.2025 | உதகை தெற்கு ஒன்றியம் (மேற்கு) | மஞ்சூர் | எட்டயாபுரம் தமிழ்ப்பிரியன்<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 15 | | உதகை தெற்கு ஒன்றியம் (கிழக்கு) | பிக்கட்டி | எட்டயாபுரம் தமிழ்ப்பிரியன்<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 16 | | உதகை நகரம் | ஏ.டி.சி. | எட்டயாபுரம் தமிழ்ப்பிரியன்<br>சி.கா.சுகன் மந்த்ரன் |

**நீலகிரி**
நாள் : 26.06.2025

கலைஞர் 100 1924 - 2023





# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர்–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில்–தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,400–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.*

*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம்–2–க்குட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் கிழக்கு | ஜெ.பிரதாப்,<br>10/3, கங்கணமேடு (கி), தேவம்பட்டு (அ),<br>பொன்னேரி, திருவள்ளூர்-601 204. |
| 2 | திருவள்ளூர் மத்திய | சி.சதீஷ்குமார்,<br>3/124, கங்கை அம்மன் கோயில் தெரு, மேட்டுப்பாளையம்,<br>திருவேற்காடு, திருவள்ளூர்- 600 077. |
| 3 | திருவள்ளூர் மேற்கு | இரா.ராஜா,<br>26, பி.கே.தெரு, மருதவல்லிபுரம் (கி),<br>மணவூர் (அ), திருத்தணி (தா), திருவள்ளூர்-631 210. |
| 4 | விழுப்புரம் மத்திய | வை.வீராசாமி,<br>4/510, விநாயகர் கோயில் தெரு,<br>வி.மாத்தூர்பாளையம், குமளம் (அ), விழுப்புரம்-605 107. |
| 5 | விழுப்புரம் தெற்கு | வே.ஜோ.கில்பர்ட்ராஜ்,<br>செஞ்சி-விழுப்புரம் பிரதான சாலை,<br>விக்கிரவாண்டி, விழுப்புரம்-605 203. |
| 6 | விழுப்புரம் வடக்கு | எ.கோபாலகிருஷ்ணன்,<br>101, மாரியம்மன் கோயில் தெரு,<br>மரக்காணம், விழுப்புரம்-604 301. |
| 7 | கள்ளக்குறிச்சி வடக்கு | ஜா.சதாம் உசேன்,<br>81, டி.ஆர்.கே.பிரதான சாலை,<br>சங்கராபுரம், கள்ளக்குறிச்சி-606 401. |
| 8 | கள்ளக்குறிச்சி தெற்கு | லி.அசாருதீன்,<br>1-ஏ, கருணாபுரம்,<br>கள்ளக்குறிச்சி-606 202. |
| 9 | கடலூர் கிழக்கு | ஆர்.தமிழ்ச்செல்வன்,<br>108, தெற்கு தெரு, வழிசோதனைபாளையம்,<br>கடலூர்-607 003. |
| 10 | கடலூர் மேற்கு | மு.முகமது பாசில்,<br>374/1, கோவிந்தராஜுலு சாலை,<br>சக்தி நகர், விருத்தாசலம், கடலூர்-606 001. |

**"அன்பகம்"**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-06-2025





கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, ஆவாரம்பாளையம் பகுதி, வார்டு வாரியாக பாகமுகவர்கள் கூட்டம் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் சிங்காநல்லூர் தொகுதி பார்வையாளர், கழக அயலக அணி. துணைச் செயலாளர் முத்துவேல் ராமசாமி முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஆவாரம்பாளையம் பகுதி பொறுப்பாளர் ப.மோகன்ராஜ், பாப்பநாயக்கன்பாளையம் பகுதி பொறுப்பாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால் உள்பட BLA2 பாகமுகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் செயலாளர் மறைந்த எஸ்.பி.முருகதாஸ் அவர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. தூய்மை பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள், மாணவர்கள் உள்ளிட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் நகர செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ். பாண்டியன்,எஸ்.பி.ராமகிருஷ்ணன், எஸ்.பி. பாஸ்கர், எஸ்.பி.எம். போஜராஜன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக , வார்டு கழக பொறுப்பாளர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## சேலம் மத்திய மாவட்டம்

# சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

### தொகுதிப் பார்வையாளர் பார்.இளங்கோவன் ஆலோசனை வழங்குகிறார்!

*சேலம், ஜுன். 28 -*

*சேலம் மத்திய மாவட்டம், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டங்கள் இன்று (28.06.2025 சனிக்கிழமை மற்றும் நாளை (29.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு தேதிகளில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழிகாட்டுதலின்படி கழக தீர்மானக் குழு துணைத் தலைவர், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார். இளங்கோவன் தலைமையில் நடைபெறுகிறது.*

*கீழ்க்காணும் அட்டவணைப்படி சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது. இக்கூட்டங்களில் மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக் குழு உறுப்பினர்கள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்கு சாவடி குழு உறுப்பினர்கள் (BLC), தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் (BDA), சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இன்று (28.06.2025 - சனிக்கிழமை) காலை 10.30 மணி, பணிக்குழு எண். 7, குகை பகுதி, குகை, மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், காலை 11.30 மணிக்கு, பணிக்குழு எண். 8, குகை பகுதி, பிரபாத், அம்பேத்கர் சமூதாய கூடத்திலும், மதியம் 3 மணிக்கு, பணிக்குழு எண். 3, அன்னதானப்பட்டி பகுதி, நெத்திமேடு, மாணிக்கம்மாள் திருமண மண்டபத்திலும், மாலை 4 மணிக்கு, பணிக்குழு எண் 4, அன்னதானப்பட்டி, காந்தி நகர் பகுதி, மணியனூர், வார்டு செயலாளர் அலுவலகத்திலும் நடைபெறுகிறது.*

*நாளை (29.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, பணிக்குழு எண்.11, அம்மாப்பேட்டை பகுதி, ராமநாதபுரம், செட்டிக்கார பங்காளிகள் திருமண மண்டபத்திலும், காலை 11 மணிக்கு, பணிக்குழு எண் 12, அம்மாப்பேட்டை பகுதி, அம்மாப்பேட்டை, ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் மண்டபத்திலும், மதியம் 12 மணிக்கு, கிச்சிப்பாளையம் பகுதி, பணிக்குழு எண் 9, அம்மாப்பேட்டை, நதி முல்லாமக்கான் திருமண மண்டபத்திலும், மதியம் 1 மணிக்கு, பணிக்குழு எண். 10, கிச்சிப்பாளையம் பகுதி, கிச்சிப்பாளையம், தனசிவா திருமண மண்டபத்திலும், மாலை 3 மணிக்கு, பணிக்குழு எண் 5, தாதகாப்பட்டி பகுதி, கருங்கல்பட்டி, ராமச்சந்திரா கல்யாண மண்டபத்திலும், மாலை 4 மணிக்கு, பணிக்குழு எண் 6, தாதகாப்பட்டி பகுதி, கருங்கல்பட்டி, கன்னட சைனீகர் திருமண மண்டபத்திலும், மாலை 5 மணிக்கு, பணிக்குழு எண். 2, கொண்டலாம்பட்டி பகுதி, அருணாச்சலம் மெயின் ரோடு, எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபத்திலும், மாலை 6 மணிக்கு, பணிக்குழு எண் 1, கொண்டலாம்பட்டி பகுதி, ஜாரி கொண்டலாம்பட்டி, கோவில் மண்டபத்திலும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.*